மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Language Corruption and Re Configuration in News

Dr. T. Sathiyaseelan

Assistant Professor, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science (Autonomous), Coimbatore, India

Manuscript ID :
MT104A0035

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 23.08.2022
Revised: 27.08.2022
Accepted: 29.08.2022
Published: 02.09.2022

Pages : 14-22

DOI:
10.5281/zenodo.7371235

ABSTRACT:

Tamil Language in various newspapers has been adapting various words both in English as well as Tamil. There is no uniformity in the language printed in various newspapers. This has brought out a new form of language known to be 'Newspaper Tamil'. Though we deem it to be term, there is variety in these newspapers too in the usage of the language. Many of the Tamil newspapers include English words as such in Tamil to reach more to the general public. This paper deals with the usage of English words and different usage of terms in Tamil language in the Tamil newspaper.

KEYWORDS:

Royal ladies, Thevaradiyar, Working women, Homemakers

பத்திரிகைச் செய்திகளில் மொழிச்சிதைவும், மறுகட்டமைப்பும்

முனைவர் த. சத்தியசீலன்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (நன்னாட்சி),
கோயம்புத்தூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தகவல் தொடர்பியல் வரலாறும், சமுதாய வரலாறும் அந்தந்த கால சமுதாயத்தின் தகவல் தொடர்பிற்காக சில சாதனங்களையும் வழிமுறைகளையும் பின்பற்றி வந்துள்ளது என்பதை உணர்த்துகின்றன. இன்றைய வளர்ச்சி சூழலில் மனித இனமும், சமுதாயமும் தனித்து செயல்படாமல் தேவைக்கேற்ற வகையில் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

கருச்சொற்கள்

இதழியல், பத்திரிகைத் தமிழ், செய்திகள், வட்டார வழக்கு, பேச்சு மொழி

முன்னுரை

தமிழ் சமுதாயத்தில் மொழிப்பயன்பாட்டில் மாற்றம், வாழ்வியலில் அமைப்பு மாற்றம், அறிவியல் வளர்ச்சிகள் ஆகியவை நிலைபெறத் தகவல்தொடர்பு சாதனங்கள் முக்கிய அடிப்படைக்காரணியாகின்றன. இதழ்கள், வானொலி, விளம்பரம், திரைப்படம், தொலைக்காட்சி, போன்ற சாதனங்கள் தகவல் தொடர்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தில் விளைவுகளை ஏற்படுத்துவதில், நான்காம் தூண் என்றழைக்கப்படும் செய்தி இதழ்களுக்குப் பெரும் பங்குண்டு.

"டன் கணக்கில் பேசப்படும் பேச்சுகள் காற்றோடு கலந்து விடும். அவுன்ஸ் அளவு எழுதினாலும், அவை ஆவணங்களாகி விடும்" 1 என்ற கூற்று செய்தி இதழ்களுக்குச் சாலப் பொருந்தும்.

"இதழியலின் வரலாறு 16-ம் நூற்றாண்டில் இருந்தே தொடங்குகிறது என்கின்றனர், ஆய்வாளர்கள். உலகின் முதல் இதழ் 1605-ம் ஆண்டு ஆஸ்திரியாவில் வெளிவந்தது என்றும், **இந்தியாவின் முதல் இதழ் 'தி பெங்கால் கெஜட் / கல்கத்தா அட்வைசர்'** 1780 வெளிவந்தது. **ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி** என்பவரால் மேற்கு வங்காளத்தில் தொடங்கப்பட்டது. இவரே **'இந்திய இதழியலின் தந்தை'** என்று போற்றப்படுகிறார். **முதன் முதலில் தமிழ் மொழியில் வெளிவந்த இதழ் 'சிலோன்**

கெஜட்'. தமிழகத்தில் 1795-ம் ஆண்டு வில்லியம்ஸ் என்பவரால் 'மெட்ராஸ் கெஜட்' என்ற இதழ் முதன்முதலில் தமிழில் வெளிவந்தது.

இதன் தொடர்ச்சியாக 1831-ஆம் ஆண்டு தமிழின் முதல் மேகஸின் சென்னை கிறித்தவ சமயப் பிரச்சாரக் கழகத்தால் வெளியிடப்பட்டது. 1855-ல் தினவர்த்தமானி என்ற முதல் வார இதழ் பெர்சிவல் பாதிரியாரால் வெளியிடப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து பல்வேறு நாளிதழ்கள் தொடங்கப்பட்டாலும், வெகுஜன வாசிப்பில் சில நாளிதழ்கள் முக்கிய இடம் பெற்றன.

இதன்படி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனக் குழுமத்தால் 1934 -ல் தினமணி நாளிதழ் வெளிவந்தது. 1942-ம் ஆண்டு தினத்தந்தி நாளிதழ், சி.பா. ஆதித்தனாரால் மதுரையில் தொடங்கப்பட்டது. "1951-ல் நிறுவப்பட்ட தினமலர் டி.வி. இராமசுப்பையர் என்பவரால் 1951-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. சன் குழுமத்தினால் வெளியிடப்படும் தினகரன் நாளிதழ் சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் இருந்து பதிப்பிக்கப்படுகிறது. 'இந்து தமிழ் திசை' நாளிதழ் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ம் தேதி தொடங்கப்பட்டது.

செய்தி வெளியீட்டில் மாறுபாடு

வெகுஜன வாசிப்பில் தினமணி, தினத்தந்தி, தினமலர், தினகரன், இந்து தமிழ் திசை ஆகிய ஐந்து நாளிதழ்கள் முன்னிலை வகிக்கின்றன. செய்தி வெளியீட்டில் ஒவ்வொரு நாளிதழும், ஒவ்வொரு கொள்கைகளைப் பின்பற்றுகின்றன. குறிப்பாக சொற்கட்டமைப்பில் மாறுபாடுகளைக் காணமுடிகிறது.

தமிழும், தமிழுக்கான இலக்கணமும் நிலையானது என்றாலும், தமிழ் மொழியில் வெளிவரும் நாளிதழ்கள் வட்டார வழக்கு, பேச்சு வழக்கு, பிற மொழிக் கலப்பு, சொற்களைச் சுருக்குதல் என '**பத்திரிகைத் தமிழ்**' என்ற தனி நடையையே உருவாக்கி விட்டது அறிந்ததே.

இச்சொல்லாடலை ஏற்பதா? தவிர்ப்பதா? என்ற ஐயமும் எழாமல் இல்லை. தமிழ் இலக்கியம் படித்து விட்டு, நாளிதழ்களில் அச்சடிக்கப்பட்ட தமிழைப் படித்து மனம் பதறுவதை மறுப்பதற்கில்லை. பத்திரிகைத் தமிழ் குறித்து தமிழறிஞர்களும், தமிழ் ஆய்வாளர்களும் ஆய்வு செய்து பல இடங்களில் எதிர்க் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இதன் நீட்சியாக தமிழ் நாளிதழ்களான தினமணி, தினத்தந்தி, தினமலர், தினகரன், இந்து தமிழ் திசை ஆகிய ஐவகை நாளிதழ்களின் செய்திகளில் கையாளப்படும்

சொற்களை அடையாளப்படுத்தி, மறு கட்டமைப்புக்கு உட்படுத்தும் முயற்சியுடன் களம் காண முயல்கிறது, இவ்வாய்வுக் கட்டுரை.

"குடியரசுத் தலைவர் தேர்தலில்
99.18 சதவீதம் வாக்குப்பதிவு"

(இந்து தமிழ் திசை, 19.07.2022, **ப.1)**

நாட்டின் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் 99.18 சதவீதம் வாக்குகள் பதிவாக இருப்பதாக இந்து தமிழ் திசை நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. **'President of India'** என்ற பதவி, குடியரசுத் தலைவர் என்ற குறிப்பிடப்பட்டுள்ளது. தினமணி நாளிழும் இதே சொல்லையே பயன்படுத்தியுள்ளது. ஆனால் தினகரன், தினமலர், தினத்தந்தி நாளிதழ்கள் **'President of India'** என்ற பதவியை ஜனாதிபதி என்று குறிப்பிட்டுள்ளன. இதேபோல் **'Vice-President of India'** என்ற பதவியும் முறையே குடியரசுத் துணைத் தலைவர் x துணை ஜனாதிபதி என்ற பதங்களில் எழுதப்படுகிறது.

"பாட புத்தக சுமையை குறைக்க முடிவு
லோக்சபாவில் மத்திய அரசு தகவல்"

(தினமலர், 19.07.2022, **ப.3)**

இது நீட்டி விளக்கப்பட வேண்டிய செய்தி. இரண்டாகப் பிரித்து பொருள் கூறலாம். வழக்கம் போல்,

1. "பாட**ப்** புத்தக**ச்** சுமையை**க்** குறைக்க முடிவு
லோக்சபாவில் மத்திய அரசு தகவல்"

என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய தலைப்பு. ஒற்றெழுத்துகளை நீக்கி எழுதப்பட்டுள்ள சொற்களால், 'Paadapputhagam' என்ற பதம், 'Baadabuthagam' என்றும், புத்தகம் என்ற சொல் 'Pu/Budhagam' என்றும், குறைக்க என்ற சொல் 'Ku/Guraikka' என்றும் பொருள் தருகிறது.

2. Parliament, Loksabha, Rajyasabha.

இவற்றிற்குத் தனித்தனி பொருள் தமிழில் உள்ளது. 'Parliament' என்பதை 'நாடாளுமன்றம்' / 'பாராளுமன்றம்', 'லோக்சபா' என்பதை 'மக்களவை' என்றும், 'ராஜ்யசபா' என்பதை 'மாநிலங்களவை' என்றும் குறிப்பிடலாம். இவற்றிற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அவை மக்களவை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் அவை மாநிலங்களவை ஆகும்.

இச்சொற்கள் தொடர்புடைய,

"அமளியுடன் தொடங்கியது மழைக்கால கூட்டத்தொடர்
இரு அவைகளும் ஒத்திவைப்பு"

(தினமணி, 19.07.2022, **ப.**7)

என்ற செய்தியில் மக்களவை, மாநிலஎங்களவை என்று இரு அவைகளின் பெயர்களும் தமிழில் இடம் பெற்றுள்ளன. 'Parliament' என்பதை தினமணி, தினத்தந்தி, இந்து தமிழ் திசை, தினகரன் ஆகிய நாளிதழ்கள் நாடாளுமன்றம் என்று எழுதிவரும் நிலையில், தினமலர் நாளிதழ் நாடாளுமன்றம் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறது.

பாராளுமன்றம் x நாடாளுமன்றம் எது சரி?

'Parliament' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் பாராளுமன்றமா? நாடாளுமன்றமா? என்ற ஐயமும் நமக்குள் எழாமல் இல்லை. காரணம் 'Parliament' என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள 'Par' அதை பாராளுமன்றம் என்று அழைக்கவே தூண்டுகிறது. ஆனால் பெரும்பாலும் நாடாளுமன்றம் என்றே பொருளுணர்த்தப்படுகிறது.

"பார் என்றால் உலகம். பார்+ஆளும்+மன்றம். உலகை ஆட்சி செய்யும் மன்றம். 'Parliament of India' எப்படி? உலகை ஆட்சி செய்யும் மன்றமாகும். ஆக. 'Parliament' என்பதற்கு நாடாளுமன்றம் என்பதே சரி" 1. (https://ta.quora.com) பத்திரிகைள் ஏன் நாடாளுமன்றம் என்ற பதத்தையே பயன்படுத்துகின்றனர்? என்ற கேள்விக்கான பதில் இப்போது கிடைத்திருக்கும். "பாராளுமன்றம் என்ற சொல், ஐக்கிய நாடுகள் சபையைக் குறிக்கும் என்று கருதலாம்" 2. (https://ta.quora.com)

"மத்திய பல்கலை.களில் சேர்வதற்கான
நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம்"

(இந்து தமிழ் திசை, ப.2, **மே.**9)

இச்செய்தித் தலைப்பில், நுழைவுத்தேர்வு x நுழைவு தேர்வு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தேர்வு என்ற உச்சரிப்பு, 'Dhervu' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'Thervu', என்று உச்சரிக்க வேண்டிய சொல்லை 'Dhervu' என்று உச்சரிப்பது எப்படி சரியாகும். இதேபோல் மத்தியப் பல்கலைக்கழகம் x மத்திய பல்கலைக்கழகம் என்று குறிப்பிட்டுள்ளது. அதாவது Palkalaikkazhagam x Balkalaikkazhagam என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழை முழுமையாகக் கற்றுத்

தெளியாத வாசகன், நுழைவுத்தேர்வு என்பதை நுழைவு தேர்வு என்றே எழுதுவான். மத்தியப் பல்கலைக்கழகம் என்று எழுவதே சரியாகும்.

"இறைச்சி விற்கும் உணவகங்களுக்கு கட்டுப்பாடுகள்
உணவு பாதுகாப்புத்துறை முடிவு"

(இந்து தமிழ் திசை, ப.2, மே.9)

சென்னை மற்றும் காசர்கோடு ஆகிய இடங்களில் சிக்கன் ஷவர்மா சாப்பிட்ட இருவர் உயிரிழந்ததையடுத்து, உணவகங்களில் உணவு பாதுகாப்புத்துறையினர் ஆய்வு நடத்தினர். தொடர்ந்து அசைவ உணவுகள் தயார் செய்து விற்பதில் பல்வேறு கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர்.

இச்செய்தியின் தலைப்பில், "இறைச்சி விற்கும் உணவகங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. அதென்ன இறைச்சி விற்கும் உணவகம்? இறைச்சி, இறைச்சி கடைகளில் விற்கப்படுகிறது. இறைச்சியை சமைத்து விற்கும் இடம் உணவகம் எனப்படுகிறது. இச்செய்தியின் தலைப்பு, இறைச்சி உணவகங்களில் விற்பதைப் போல தொனிக்கிறது. இது பிழையல்லவா?

"அசைவ உணவகங்களுக்குக் கட்டுப்பாடுகள்" என்றல்லவா குறிப்பிட்டி ருக்க வேண்டும். இதுதான் சரியும் கூட. உணவகங்களுக்குக் கட்டுப்பாடுகள் என்பது உணவகங்களுக்கு கட்டுப்பாடுகள் என்று வந்துள்ளதால், Kattuppaadugal X Gattupaadugal என்று உச்சரிக்க வேண்டியதாகியுள்ளது.

"மயிலாப்பூர் தம்பதி கொலையில்
துரிதமாக குற்றவாளிகள் கைது"

(தினகரன், ப. 4, மே.12)

"மயிலாப்பூர் தம்பதி கொலை வழக்கில் குற்றவாளிகள் கைது
காவல்துறையினர் துரித நடவடிக்கை"

என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய செய்தித் தலைப்பு, "மயிலாப்பூர் தம்பதி கொலையில் துரிதமாக குற்றவாளிகள் கைது" என்று வந்துள்ளது. இதை வாசிக்கும் போது, குற்றவாளிகள் துரிதமாகச் செயல்பட்டு, மயிலாப்பூர் தம்பதியை கொலை செய்ததைப் போல கருதத் தோன்றுகிறது. தம்பதி கொல்லப்பட்டதும், வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஃபாலோஅப் செய்தியில், கொலை வழக்கு என்று குறிப்பிடுதலே சரி. தினகரன் நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி, குற்றவாளிகள் துரிதமாக செயல்பட்டு கொலை செய்தவுடன் கைது செய்யப்பட்டதைப் போல குறிப்பிடப்பட்டுள்ளது.

“சென்னை மாநகர காவல்துறைக்கு
முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து”

(தினகரன், ப. 4, மே.12)

தமிழகத்தின் முதல்வர் பெயருடன் எழுதப்படும் செய்தியில் எவ்வளவு கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். தமிழகக் காவல்துறை தானே உள்ளது. இதென்ன புதிதாக சென்னை மாநகரக் காவல்துறை? மாநகரக் காவல்துறை, மாவட்ட காவல்துறை என, தமிழகக் காவல்துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளனவா? என்றல்லவா கருதத் தோன்றுகிறது. சென்னை மாநகரக் காவல், தமிழகக் காவல்துறையின் ஒரு அங்கம் மட்டுமே. இச்செய்தித் தலைப்பை சென்னை மாநகரக் காவலர்களுக்கு / சென்னை மாநகரக் காவலுக்கு / சென்னை மாநகரக் காவல் பிரிவுக்கு என்றெல்லாம் குறிப்பிடச் சொற்கள் உள்ளன.

இது மட்டுமின்றி காவல்துறைச் சார்ந்த செய்திகளை எழுதும் போது, சொற்கட்டமைப்பில் பத்திரிகைகளுக்கு இடையே பல்வேறு வேறுபாடுகளைக் காண முடிகிறது. தினகரன், தினத்தந்தி நாளிதழ்கள் போலீசார் / இந்து தமிழ் திசை, தினமணி நாளிதழ்கள் போலீஸார் என்றும் எழுதுகின்றன. காவல்துறையை மட்டும் காவல்துறை என எழுதுகின்றன. காவலர்கள் என்றே குறிப்பிடலாம். ‘காவலர்கள்’ என்ற சொல்லை வாசகர்கள் ‘பாதுகாவலர்’ என்று புரிந்துக் கொள்வார்களோ என்ற தவறான பொதுபுத்தி பத்திரிகைகளிடம் காணப்படுவதை உணர முடிகிறது. வாசகர்களுக்குப் பேச்சு வழக்கில் இருக்கும் சொற்களையோ, புழங்கு மொழிநடையையோ மாற்றினால் புரியாது என்று கருதுகின்றனரோ என்றும் தோன்றுகிறது.

இதேபோல் காவல் ஆய்வாளர் x இன்ஸ்பெக்டர், உதவி காவல் ஆய்வாளர் x சப்-இன்ஸ்பெக்டர், தலைமைக் காவலர் x ஏட்டு, காவல் கண்காணிப்பாளர் x போலீஸ் சூப்பிரண்டு, காவல் ஆணையர் x போலீஸ் கமிஷனர், காவல்துறைத் தலைவர் x ஐ.ஜி (இன்ஸ்பெக்டர் ஜெனரல்), காவல்துறை தலைமை இயக்குநர் x டி.ஜி.பி. (டைரக்டர் ஜெனரல் ஆ∴ப் போலீஸ்) என்றெல்லாம் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

“ஐகோர்ட் அனுமதி அளித்ததன் பேரில்
அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம்”

(தினமலர், 11.07.2022, ப.4)

உயர்நீதிமன்றம் என்ற தமிழ்ச்சொல்லுக்கு மாற்றாக, ஐகோர்ட் என்று இச்செய்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பதத்தை தினமலர் நாளிதழ் மட்டுமல்லாது தினகரன், தினத்தந்தி நாளிதழ்களும் பயன்படுத்துகின்றன. உயர்நீதிமன்றம் x ஐகோர்ட், உச்சநீதி மன்றம் x சுப்ரீம் கோர்ட், சிறப்பு நீதிமன்றம் x ஸ்பெஷல் கோர்ட் என்றெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன.

அதேநேரத்தில் தினமணி, இந்து தமிழ் திசை ஆகிய நாளிதழ்கள் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் ஆகிய சொற்களை செய்திகளுக்குள் கட்டமைக்கின்றன.

“சொத்து வரியை குறைக்க
முழு முயற்சி மேற்கொள்ளப்படும்”

(இந்து தமிழ் திசை, ப.3, **மே**.9)

இச்செய்தித் தலைப்பில், வரியைக் குறைக்க என்பதற்குப் பதிலாக வரியை குறைக்க என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘Kuraikka’ என்று அழுத்தமாக வரவேண்டிய சொல் ‘Guraikka’ என்று மென்மையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“நீட் தேர்வில் ஆள் மாறாட்டம்”

(**தினமணி**, 20.07.2022, ப.8)

Hariyana மாநிலத்தில் நடைபெற்ற நீட் தேர்வில், ஆள்மாறாட்டம் நடைபெற்றதாக தினமணி நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில், Hariyana மாநிலத்தின் பெயர் ஹரியாணா என்று எழுதப்பட்டுள்ளது. தினகரன், தினமலர், தினத்தந்தி நாளிதழ்களில் அரியானா என்று எழுதப்பட்டுள்ளது.

“ஓய்வூதியர்கள் உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்க உத்தரவு”

(**தினகரன்**, 20.07.2022, ப.8)

ஓய்வூதியம் பெறும் அரசு துறைகளில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் ஊழியர்கள், ஆண்டுதோறும் ‘Life Certificate’ அளிக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘Life Certificate’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் **உயிர்வாழ் சான்றிதழ்** என்றாலும், ஒரு முதியவரிடம் நீங்கள் உயிருடன் இருப்பதற்கான சான்று கொடுங்கள்! என்று கேட்பது எவ்வளவு தவறானது. ஏற்க இயலுமா? அப்படியென்றால் மொழியாக்கமும் பிழைப்படும். பின்னர் எப்படி குறிப்பிடலாம் எனில், ‘**வாழ்வு சான்றிதழ்**’ என்று குறிப்பிடுவதே மிகச் சரியாக இருக்கும் என்று ஆய்வாளர் கருதுகிறார்.

முடிவுரை

பத்திரிகைகள் தாங்கி வரும் செய்திகளில் காணப்படும் பிறமொழிக் கலப்பு, பத்திரிகைகளுக்கு பத்திரிகை செய்திகளில் கட்டமைக்கப்படும் சொற்கள் மாறுபாடு, பிறமொழிக் கலப்பு, பேச்சு வழக்கு போன்ற பத்திரிகைத்தமிழ் மொழி நடையால் ஏற்படும் மொழிச் சிதைவுகளை இவ்வாறாக அடுக்கிக் கொண்டே செல்லலாம். ஆய்வுக்

கட்டுரையின் எல்லைக் கருதி, ஓரிரு நாட்களுக்கான முன்னணி பத்திரிகைகள் மட்டும் இக்கட்டுரையில் எடுத்தாளப் பெற்றுள்ளன. தமிழில் அழுத்தமாகவும், மென்மையாகவும் உச்சரிக்கப்பட வேண்டிய ஒரே எழுத்துக்கள், ஆங்கிலத்தில் உதாரணங்களாகக் காட்டப் பெற்றுள்ளன. தமிழறிஞர் மகுடேசுவரன், தமிழில் ஒரு ‘க’ மட்டும் தானா? என்ற தலைப்பில், தினமலர் பட்டம் இணைப்பிதழில் 18.07.2022 அன்று ஓர் கட்டுரை எழுதியுள்ளார். அதில் மொழிக்கு முதலில், நடுவில் ‘க’ வரும்போது, அது எவ்வாறு உச்சரிக்கப்படுகிறது என்பதை ஆங்கிலச் சொற்களை மேற்கொள் காட்டியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது.

தொகுப்புரை

1. செய்திகளை உருவாக்கக் கட்டமைக்கப்படும் சொற்களை வைத்துக் கொண்டு ஆராய்வதன் மூலம் பலவித தகவல்களை ஆய்வுலகிற்குக் கொண்டுச் செல்ல முடியும்.
2. இதுபோன்று சிறு கட்டுரைகள் கூட, ஆய்வுகளுக்கு தொடக்கப்புள்ளியாக அமையலாம்.
3. ஆய்வில் பின் தங்கி காணப்படும் இதழியல் துறைக்கு பயன்படலாம்.

துணைநூற்பட்டியல்

1. குருசாமி, மா.பா., - இதழியல் கலை, வண்ணன் வெளியீடு, சாத்தான்குளம், 1992.
2. குமார். இரா., - நடைமுறை இதழியல், முல்லையகம் வெளியீடு, ஏ-6, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, 208, அண்ணா சாலை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-28.
3. ஆதித்தனார் சி.பா., - இதழாளர் கையேடு, ராணி முத்து, சென்னை-7, ஜன., 1978.
4. சத்தியசீலன். த., - தமிழ் நாளிதழ்கள், இணைய இதழ்கள்-ஒப்பாய்வு, ஆய்வேடு / நூல், மசிவன் பதிப்பகம், விழுப்புரம்.
5. சத்தியசீலன். த., - காலச்சுவடு-ஓர் மதிப்பீடு, ஆய்வேடு, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-18.
6. தினத்தந்தி.
7. தினமணி.
8. தினமலர்.
9. தினகரன்.
10. இந்து தமிழ் திசை.
11. https://ta.quora.com

References

1. Gurusamy, Ma.Pa, Idhazhiyal kalai, Vannan Veliyeedu, Sathankulam, 1992.
2. Kumar, R. Nadaimutai Idhazhiyal, Mullaiyagam Veliyeedu, Tamilnadu Housing Board Quarters, 208, Anna salai, Kalaingar Karunanidhi Nagar, Chennai-28.
3. Adhithanar, Si. pa., Idhazhalar Kaiyedu, Rani muthu, Chennai-7.
4. Sathiyaseelan. Tha., Tamizh Naalidhalgal, Inaiya idhazhgal-Oppaivu, Thesis/ Book, Masivan Padhippagam, Villupuram.
5. Sathiyaseelan. Tha., Kalachuvadu – Or Aivu, Govt. Arts College (Autonomous), Coimbatote.
6. Daily Thanthi
7. Dinamani
8. Dinamalar
9. Dinathanthi
10. Hindu Tamil Thisai
11. https://ta.quora.com